# DEPOSITION OF WITNESS
# IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, THIRUVIDAIMARUTHUR.

Deposition of Witness for : PW-2 | Date : 02.04.2024
Case No. : **O.S.1/2023** | Nationality : Indian
Name : சுதாகர் (கிராம நிர்வாக அலுவலர், திருபுவனம் கிராமம்) | Religion :
Age : 39
Father's/Husband's Name :
Village :
Taluk :

<u>வா.சா.2</u>

சாட்சி சத்திய பிராமாணம் செய்து விசாரிக்கபடுகிறார்.

**<u>முதல் விசாரணை :-</u>**

நான் தற்போது திருவிடைமருதூர் தாலுக்கா திருபுவனம் கிராமத்தில் கிராம நிர்வாக அலுவலராக பணியாற்றி வருகிறேன். எனக்கு நீதிமன்றத்தில் இருந்து சாட்சியம் அளிக்க அழைப்பாணை வந்ததின்பேரில் நான் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் . நான் அழைப்பாணையில் குறிப்பிடப்பட்டுள்ள திருபுவனம் கிராமம் தெற்கு வீதி வடசரகில் அமைந்துள்ள புல எண் 647/22 பழைய புல எண் 76/4 ல் கண்ட சொத்திற்கான நத்தம் நிலவரித்திட்ட தூய சிட்டா., அடங்கல் மற்றும் புல வரைபட அசல் பதிவேடுகளை எடுத்து வந்துள்ளேன். மேற்படி அசல் பதிவேடுகள் எங்களது அன்றாட அலுவல் பணிக்கு தேவைப்படுவதால் அதன் உண்மை நகல்களை தாக்கல் செய்கிறேன் . புல எண் 647/22 ல் கண்ட சொத்திற்கான நத்தம் நிலவரி திட்ட தூய சிட்டா உண்மை நகல் **சா.சா.ஆ 1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. புல எண் 647/22 ல் கண்ட சொத்திற்கான நத்தம் நிலவரி திட்ட தூய சிட்டா அடங்கல் உண்மை நகல் **சா.சா.ஆ 2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. புல எண் 647/22 ல் கண்ட சொத்திற்கான புல வரைபடம் உண்மை நகல் **சா.சா.ஆ 3** ஆக குறியீடு

செய்யப்படுகிறது. மேற்படி புல எண் 647/22 ல் கண்ட சொத்து ஜானகிராமன் என்பவரின் வாரிசுகள் கமலா, ரத்தினமாலா, சரோஜா, ராமமூர்த்தி, கிருஷ்ணன், பாஸ்கர் , ஜெய்குமரன் ஆகியோர் பெயரில் உள்ளது.

**(பிரதிவாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது).**

x

Taken down by Typed to my dictation
in Open Court read over to the witness
admitted and acknowledged by
him/her to be correct.

Sd/- N. Sivapalani,
District Munsif cum Judicial Magistrate,
Thiruvidaimarudur.